Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

பொதுசன நூலகம்
மாநகராட்சி
28-1-1994
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 14 (27-01-94) வியாழக்கிழமை ஓசை 343

## வெளியூர் தபால் விநியோகம் மேலும் தாமதமடையும்?

யாழ். குடாநாட்டிற்கான தபால் விநியோகத்தில் கால தாமதம் ஏற்படும் என தெரியவந்துள்ளது. இதுவரை காலமும் தபால் ஊழியர்களுக்கென வழங்கப்பட்டு வந்த மேலதிக வேலைப்படி நிறுத்தப்பட்டதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுவரைகாலமும் யாழ். பிரதான தபாலக ஊழியர்களுக்கு மேலதிக நேர வேலைப்படி வழங்கப்பட்டுவந்தது. ஆனால் கடந்த நவம்பர் மாதம் முதல் இம் மேலதிகப்படி நிறுத்தப்பட்டதை அடுத்து ஊழியர்களின் அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தற்போது வாதுவ கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டுள்ள தபால் பொதிகள் தரம் பிரிப்பதில் காலதாமதம் ஏற்படும் என தபா (4 ஆம் பக்கம் பார்க்க)

# அதிமேற்றிராணியார் புலிகள் இன்று சந்திப்பு

## தமிழ்மக்களின் இன்றைய நிலை குறித்துப் பேச்சு நடத்துவார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திற்கு தற்பொழுது விஜயம் செய்துள்ள கொழும்பு அதி மேற்றிராணியார் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோவும், அவரது குழுவினரும் இன்று விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசவுள்ளனர். இச் சந்திப்பின்போது தமிழ் மக்களின் இன்றைய நிலைபற்றி முக்கியமாகப் பேசப்படும் எனவும் தெரியவருகின்றது.

கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ, கிழக்கு மாகாண ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, துறவறச் சங்கத் தலைவர் பிதா. அலெக்சாண்டர் ஆகியோர் நேற்றுக் காலை கப்பல் மூலமாகப் பருத்தித்துறை வந்தடைந்தனர்.

பின்னர் வாகனம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அதிமேற்றிராணியரும் ஏனையோரும் சிறிலங்கா ஆயுதப்படையினர் நடத்திய தாக்குதல்களால் அழிவுற்ற இடங்களையும் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை இக் குழுவினர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை இன்று சந்திக்கவுள்ளனர். இச் சந்திப்பின்போது தமிழ் மக்களின் இன்றைய நிலைபற்றி பிரதானமாகப் பேசப்படும் எனவும் அறியவருகின்றது.

இச் சந்திப்பின்போது அதிமேற்றிராணியாருடன்கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள ஏனையவர்களும் கலந்துகொள்வார்கள் எனவும் அறியவருகின்றது.

## பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் தென்பகுதி மக்கள் ஆவலும் இதுவே

### யாழ். வந்த அதிமேற்றிராணியார் தெரிவிப்பு

(வடமராட்சி)

வடக்கு கிழக்கில் நீண்டகாலமாக எழுந்துள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படவேண்டும் என்பதில் இங்குள்ளவர்கள் மட்டுமல்ல தென்பகுதியில் இருப்பவர்களும் விரும்புகின்றனர். இதையே நாமும் விரும்புகிறோம்.

இவ்வாறு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள அதிமேற்றிராணியார் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ நமது வடமராட்சி நிருபருக்கு வழங்கிய விசேட பேட்டியின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாங்கள் சமாதானப் பிரியர்களாகவே இங்கு வந்தி...

...மா இல்லையா என்பது சம்பந்தப்பட்டவர்களுடன் பேசிய பின்பே தெரிய வரும். இங்கு நிலவும் இனப்பிரச்சினையை நல்ல முறையில் அணுகி நல்லதொரு தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதில் நாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம் என்றார்.

## காமினிதிஸநாயக்கா மீண்டும் நேற்று ஐ. தே. கவில் இணைந்தார்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா நேற்று மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார்.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை சந்தித்து அவர் ஐ.தே. கவில் இணைவதற்காக அங்கத்துவ கட்டணத்துடன் விண்ணப்பப் படிவத்தையும் கையளித்தார். ஐ. தே. க. தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி, காமினியிடம் ஐ. தே. க. அங்கத்துவ அட்டையை வழங்கினார். பின்னர் இருவரும் வாழ்த்துக்கள் பரிமாறிக்கொண்டனர்.

காமினியும் ஏனையோரும் ஐ. தே. கவில் இணைவதை தாங்கள் மனப்பூர்வமாக ஏற்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். இவ் வைபவத்தில் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் கே. சொக்ஸி மற்றும் ஜனநாயகஐக்கிய தேசிய முன்னணியின் மாகாணசபை உறுப்பினர் சரத்கமுனுகம, முன்னாள் எம். பிகளான சந்திரா விஞ்ஞாகார, ஆரியரட்ன ஜெயதிலக, வின்சன்ற் பெரேரா, பிரேமரட்ன குணசேகரா, லக்ஷ்மன் செனிவிரட்ன மற்றும்மத்திய, மேல் மாகாண சபைகளின் உறுப்பினர்கள், முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர்கள், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அமைப்பாளர்கள், கட்சி அலுவலக உத்தியோகத்தர் முதலானோரும் பங்குபற்றினர்.

### காமினி இணையும் நிகழ்வு; ரணில், குரே வரவில்லை

(கொழும்பு)

காமினி திஸநாயக்காவை ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்தவராக இணைத்துக் கொள்ளும் வைபவத்தில் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் கட்சிப் பொதுச் செயலாளரும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான சிறிசேனகுரேயும்கலந்துகொள்ளவில்லை எனதெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இவர்கள் நடந்து கொண்டமையை காமினி திஸநாயக்காவைஐக்கியதேசியக் கட்சியில் இணைத்தமைக்கு அவர்கள் தெரிவித்த எதிர்ப்பு எனக் கொள்ளலாம் என கொழும்பில் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவில் இணைவதை எனது கட்சியினர் ஏற்றுள்ளனர்

### -காமினி திஸநாயக்கா

(கொழும்பு)

''ஐ.தே.கவில் இணைவதற்கு விண்ணப்பித்துள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஜனாதிபதி விஜேதுங்கா தலைமையிலான ஐ.தே.கவின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் எனது கட்சியின் பெரும்பான்மையானவர்கள்ஏற்றுள்ளனர் என்பதையே நான் இம்முடிவை எடுக்கக் காரணம்'' இவ்வாறு நேற்று ஆளும் ஐ.தே.கவில் மீண்டும் இணைந்தபின் நேற்றுமாலை காமினி திஸநாயக்கா விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வரலாற்றில் தற்போது தோன்றியுள்ள மிக நெருக்கடியான கால கட்டத்தில் இதேவித நம்பிக்கையை கொண்ட அரசியற் கட்சிகளும் ஏனைய அமைப்புகளும் தனிப்பட்டவர்களும் ஐக்கியப்பட வேண்டும். தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததி அமைதியோடு வாழ இது மிகவும் அவசியமாகும்.

ஜனாதிபதிவிஜேதுங்காவின் திறந்த மனப்பான்மையையும் ஜனநாயக போக்கையும் நோக்கியே கட்சியில் மீண்டும் இணைய முடிவெடுத்தேன். பிரதமர் ரணில் மற்றும் கட்சி பிரமுகர்களின்...

### ஐ.தே.கவில்காமினிஇணைவு

தேன். பிரதமர் ரணில் மற்றும் கட்சி பிரமுகர்களின் உதவியுடன் தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்ப ஜனாதிபதி வகிக்கும் முக்கியபங்கை நாம் அனைவரும் மதிக்கின்றோம். ஐக்கிய இலங்கையை உருவாக்கும் முயற்சியில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஐ.தே.கவிற்கும் அதன் தலைவர்களுக்கும் ஆதரவு அளிப்பதை உறுதிப்படுத்துகிறேன் என காமினி திஸநாயக்கா தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

திக்கவுள்ளனர். இச் சந்திப்பின்போது தமிழ் மக்களின்

யே நாமும் விரும்புகிறோம். இவ்வாறு கொழும்பில்

யில்; நாங்கள் சமாதானப் பிரியர்களாகவே இங்கு வந்திருக்கிறோம். இனப்பிரச்சினையில் ஒரு சுமுகநிலை ஏற்படு

றார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நீங்கள் சிறிலங்கா அரசின் ஆலோசனைகள் எதையாவது எடுத்து வந்திருக்கிறீர்களா எனக் கேட்டபோது அவ்வாறு எதுவுமில்லை எனப்பதிலளித்தார்.

மேலும் நாங்கள் இங்கு வந்தது ஒரு நல்ல நிலையான சமாதானத்தை ஏற்படுத்தவே. சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி முடிவெடுக்காமல் இப்போது எதையும் கூறமுடியாது.

நான் எனது யாழ். விஜயத்தின் போது இளவாலை,

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கவில்காமினிஇணைவு ஆச்சரியம் தரவில்லை

### ஐ. ஐ. தே. மு. முக்கியஸ்தர் தெரிவிப்பு

(கொழும்பு)

காமினி திசநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டமை குறித்து ஆச்சரியப்பட எதுவுமில்லை. இவ்வளவு நாள் தாமதம் தான் எம்மை ஆச்சரியப்பட வைக்கிறது என அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரானசட்டத்தரணி ஏ.பி.குணரட்ணா தெரிவித்தார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பொதுச்சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் விருப்பத்தின் பெயரிலேயேதான் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் வேலைத்திட்டங்களை யு. என். எச். சீ. ஆர். ஆரம்பிக்கும்

### புலிகளுடனான பேச்சில் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் நேற்று விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து வடமாகாணத்தில் மீண்டும் தமது நிவாரணம் மற்றும் வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளனர். நேற்று நடைபெற்ற பேச்சுக்களில் யூ. என் எச்.சீ. ஆர். சார்பில் பாதுகாப்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலஸ், யாழ் வதிவிடப் பிரதிநிதி ஆசோக் குமார் ஆகியோரும் விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கலந்து கொண்டனர்.

காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இப் பேச்சுக்கள் சுமார் மூன்று மணி நேரம் நீடித்தது. மடுவில் உள்ள இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பணிகள், புனர்வாழ்வு வேலைத்திட்டங்கள், வெளிநாடுகளிலிருந்து வரும் இடம்பெயர்ந்த அகதிகள் பிரச்சினைகள் போன்ற பல விடயங்கள் பேச்சுக்களில் இடம்பெற்றன.

மடுவில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு சிறிலங்கா அரசு வழங்கிவரும் நிவாரணப் பொருள்களை தொடர்ந்தும் அரச அதிபர் மேற்கொள்வார். இவற்றினை எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கான பாதுகாப்பை இனி யூ. என். எச். சீ. ஆர். வழங்காது. எனினும் மடுமுகாம் மக்களுக்கான சுகாதாரம், குடிநீர், தங்குமிடம், போக்குவரத்து வசதிகளை யூ. என். எச். சீ. ஆர். மீண்டும் ஆரம்பிக்கும்.

இப்பணிகள் கடந்த சில தினங்களாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

# புலிகளுடனான பேச்சு பயனுள்ளதாய் அமைந்தது

### சர்வதேச செஞ்சிலுவை யாழ். பிரதிநிதி

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு குறித்தும் பாதுகாப்பு வலயம் குறித்தும், உணவுக் கப்பல் போக்குவரத்து சம்பந்தமாகவுமே விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் யாழ், வதிவிடப் பிரதிநிதி செற்றிக் பிர்லா தெரிவித்தார்.

யாழ். வந்துள்ள செஞ்சிலுவையின் ஆசிய விவகாரங்களுக்கான பிரதிநிதி மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுகள் பயனுள்ளதாக அமைந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்,

செஞ்சிலுவையின் ஆசிய விவகாரங்களுக்கான பிரதிநிதி பிலிப் கொண்டஸா சிறிலங்காவின் சகல மட்டங்களிலும் உள்ள படை அதிகாரிகளையும், ஜனாதிபதி விஜேதுங்காவையும் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஜெனிவா உடன்படிக்கையில் உள்ள மனிதாபி

(4ஆம் பக்கம் பார்க்க)

### குண்டுவீச்சால் அழிவுற்ற

# புனிதயாகப்பர் தேவாலயத்தை அதிமேற்றிராணியார் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய குண்டுத் தாக்குதலினால் இடிந்து போன குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தை கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ நேற்று பார்வையிட்டார்.

கொழும்புஅதிமேற்றிராணியாருடன் மட்டக்களப்பு-திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், இலங்கைத் துறவற சபைத் தலைவர் பிதா. அலெக்சாண்டர், யாழ் மனித முன்னேற்ற நடுநிலைப் பணியக இயக்குநர் பிதா. ஜெபநேசன் மற்றும் மேற்படி ஆலய பங்குத் தந்தை நேசநாயகம் ஆகியோரும் சென்று மேற்படி இடிந்த தேவாலயத்தைப் பார்வையிட்டனர்.

அத்துடன் யாழ். நகரக் கரையோரப் பகுதிகளான குருநகர், பாசையூர் ஆகிய பகுதிகளில் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களால் ஏற்பட்ட அனர்த்தங்கள் ஆகியவற்றையும் குண்டுத் தாக்குதலுக்குட்பட்ட யாழ். செயலகத்தையும் ஆயர் குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

பின்னர் இத் தேவாலயம் குண்டுத்தாக்குதலால் சேத

(4ஆம் பக்கம் பார்க்க)

# மன்னம்பிட்டிக் கிராமம் அதிகாலை சுற்றிவளைப்பு

### 22 பேர் பொலநறுவையில் தடுத்து வைப்பு

(கொழும்பு)

பொலநறுவை மாவட்ட எல்லைக் கிராமமான மன்னம்பிட்டி கடந்த வெள்ளியன்று சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்ட 100 பேரில் பெண்கள் உட்பட 22பேர் பேர் மேல் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதிகாலை ஐந்து மணிக்கு சுமார் 1500 படையினர் மன்னம்பிட்டியை சுற்றிவளைத்து மாலை 5மணி வரை தேடுதல் நடத்தினர். பாடசாலைகள், அலுவலகங்கள் ஆகியனவும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. 115 பொதுமக்கள் ட்ரக் வண்டிகளில் ஏற்றப்பட்டு ஆறு மைலுக்கு அப்பாலுள்ள பொலநறுவை பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டனர். 22 பேர் விசாரணைக்காக தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் விடுவிக்கப்பட்டனர். தடுத்து வைக்கப்பட்டோரில் நான்கு பெண்களும் அடங்குவர்.

### கொழும்பு துறைமுகம் வந்த

# இரேக்கக் கப்பலில் இருந்த 14 தமிழ் மாலுமிகள் கைது

(கொழும்பு)

கொழும்புதுறைமுகம் வந்து தரித்து நின்ற கிரேக்க கப்பல் ஒன்றில் பணியாற்றிய 14 இலங்கைத்தமிழர்கள் கொழும்புத் துறைமுகப் பொலிசாரால் கடந்த சனியன்று கைது

(4ஆம் பக்கம் பார்க்க)

### புதிய ஜனாதிபதி ஆலோசகர்

# நியமிக்கப்பட்டமை குறித்து பாஸ்கரலிங்கம் கிலேசம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதியின் ஆலோசகராக விக்கிரமவீரசூரிய நியமிக்கப்பட்டமை குறித்து நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரான பாஸ்கரலிங்கம் மனக்கிலேசமடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரது செயலாளராக பாஸ்கரலிங்கம் இருந்தபோது இவரது செயற்பாடுகளை விக்கிரம வீரசூரிய வன்மையாகக் கண்டித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஒரு நிலையில் விக்கிரம வீரசூரியவுடன்

(4ஆம் பக்கம் பார்க்க)

### துப்பாக்கி ரவையை

# குத்திப் பரிசோதித்த இளைஞர் படுகாயம்

துப்பாக்கி ரவையை குத்திப் பரிசோதித்தபோது அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

உசன் மிருசுவிலைச் சேர்ந்த கந்தையா வசந்தன் (வயது 17) என்னும் க.பொ.த. சாதாரணதர மாணவனே இவ்வாறு படுகாயமடைந்தவராவார். நிலத்தில் கிடந்த துப்பாக்கி ரவையை குத்திப் பரிசோதித்தபோது அது வெடித்ததில் கையின் பெருவிரலொன்றை இழந்ததுடன் மணிக்கட்டுக்கு மேற்பகுதியும் பலத்த காயமேற்பட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### ஸ்ரீலங்கா அச்சகம்

ராஜா தியேட்டர் அருகாமையில் அமைந்திருப்பதே மக்கள் அபிமானம் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம். உங்கள் பிரசுர வேலைகளுக்கு எமது அச்சக லேனைப் பாவியுங்கள். (7308)

### பவுசர் (Bowser) விற்பனைக்கு

2000 கலன் நீர் கொள்ளக்கூடிய பவுசர் விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்'', (சி-8461)

### விற்பனைக்குண்டு

யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக்கொள்ளல் தமிழ் கற்பித்தலில் உன்னதம் ஆசிரியர் பங்கு பேராசிரியர் - கா. சிவத்தம்பி விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக சாலை யாழ்ப்பாணம். (இ-8408)

### விற்பனையாகிறது

காவேரி சீயாக்காய்ப்பவுடர் இப்போது எங்கும் கிடைக்கும். 50 கிறாம் 1 பைக்கட்டுக்கு 94-ம் ஆண்டு பொக்கட் கலண்டருடன் விற்பனையாகிறது. (7319)

உ
சிவமயம்

### மெய்கண்ட தேவர் ஆதீனம்

சி. வ. ஞானசேவையகம் 480, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் (யாழ் இந்து மைதானச்சந்தி) இன்று, 27 01.94 வியாழன் முதல் தினசரி இலவச சேவை நிகழும்.

(7327)

## முக்கிய அறிவித்தல்

இன்று 27. 01. 94 மாலை 3மணியளவில் வட பிராந்திய பொதி சுமக்கும் வாகனச் சங்க உரிமையாளர்களின் கலந்துரையாடல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற இருப்பதால் அத் தருணம் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

வட பிராந்திய பொதி
சுமக்கும் வாகனச்
சங்கம்

(7340)

## தமிழீழத்தில் புதிய ஒரு கலைப்படைப்பு!



## சிறி படப்பிடிப்பு கலையகம்

- புகைப்பட பிரியர்களுக்கு மட்டில்லா மகிழ்ச்சி தரும் அசல் அழகிய வர்ணப்படங்களை இயற்கை அழகில் நீங்கள் பெற்றிடவும்
- வெளிப்புற படப்பிடிப்புக்களை உங்கள் இரசனைக்கு ஏற்ப செய்து வழங்கவும்
- தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை பெறவும்
- பிலிம்றோல்கள், அல்பங்கள், சகலவகை பற்றரிகள் மற்றும் போராளிகளது படங்கள் அனைத்தும்

நீங்கள் அலையாது பெற்றிட நாடுங்கள்

V

வானவில் கூல்பார் மேல்மாடியில் அமைந்துள்ள

## சிறி படப்பிடிப்பு கலையகம்

அர்ச்சுனா வீதி, ஆரியகுளம் சந்தி.
யாழ்ப்பாணம். (சி-8454)

## நினைவு கூருகின்றோம்..
## 1994-01-27

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருகோணமலை - குச்சவெளிப் பகுதியில் சிறிலங்கா படையினரால் படுகொலை செய்யப்பட்ட 05 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த,

**மோகன்** (சோமசுந்தரம் விமலதாஸ்-ஓமந்தை-வவுனியா)

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவு - வெடிவைத்தகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய, முல்லைத்தீவு மாவட்டத்தளபதி,

**மேஜர் காந்தன்** (வீரசிங்கம் திலீப்குமார்-திரியாய்-திருகோணமலை)

**மதுவன்** (கனகசபை கருணாநிதி - கொக்கிளாய்-மணலாறு)

**கப்டன் ரஞ்சன்** (செல்வராசா கருணாகரன்-ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**கப்டன் புத்தா** (முருகன் சந்திரகுமார்-கொழும்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வந்தாறுமூலை களுவங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1993 ஆம் ஆண்டு கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,


**நெடுங்கிளியன் | றோய்** (சிவராசா வெற்றிவேல்-செங்கலடி - மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் (கிளாலி) மண்ணெண்ணெய் ஏற்றிவருகையில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலின் போது படகு தீப்பற்றியெரிந்ததிற் கொல்லப்பட்ட மட்டு நகரைச் சேர்ந்த ஒருவர். புங்குடுதீவுப் பகுதியில் இடம்பெயர்ந்துவந்து கைதடி. நாவற்குழிப் பகுதியில் வசித்து வந்த இருவர். நல்லூர், கல்வியங்காடு, ஜி. பி. எஸ். வீதியைச் சேர்ந்த ஒருவர் மற்றும் காயமுற்ற நிலையில் தப்பும் முயற்சியாகக் கடலில் பாய்ந்துநீந்தி வருகையில் உயிரிழந்த ஒருவர் ஆகிய 05 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8457)



## யாழ் நகரில் ஒரு புதிய மலர்வு

# தமிழரசு நகைத் தொழிலகம்





## தங்க நகை வர்த்தகர்களுக்கு ஓர் அரிய வரப்பிரசாதம்

★ தமிழீழத்தின் திறமையான நகை வல்லுநர்களினால் தயாரிக்கப்பட்ட வளையல்கள், காதணிகள், நெக்லஸ், அட்டியல், ஹேர் கிளிப், புடவை கிளிப், கைச்செயின் மற்றும் மோதிரங்கள், பென்ரன்கள், சிமிக்கிகள் அனைத்தும் வாங்கத் தூண்டும் விலையில்......

★ நகைகளில் நுணுக்க வேலைப்பாடுகளை செய்து பெறவும்

★ தங்க நகைத் தேவைகள் சீரிய முறையில் வெட்டம் போடவும் (CUTTING WORK)

சகல தரங்களிலும்

மொத்தமாக நீங்கள் பெற்றிட

V

பொன்னெழில் மின்னிடும் தரம் குறையா தங்கமென என்றென்றும்

# தமிழரசு நகைத் தொழிலகம்

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி-8453)

## சிந்தனைக்கு

ஆகாயக் கோட்டை கட்டுவதற்குக் கட்டடக் கலையின் விதிமுறைகள் எதுவும் கிடையாது.

-- ஜி. கே. செஸ்ட்டர்ட்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# ஆதாரமற்றது

இந்திய அரசியல்வாதிகள் சிலராலும், பத்திரிகையாளர் சிலராலும் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியையும், விடுதலைப் புலிகளின் வெற்றிகளையும் ஜீரணித்துக்கொள்ளவேமுடிவதில்லை. இதன் காரணமாக அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதும், போராட்டத்தில் கிடைக்கும் வெற்றிக்குக் குதர்க்கமான காரணம் கற்பிப்பதிலும் எப்பொழுதும் அவர்கள் தீவிர கவனம் செலுத்துகின்றனர். இதற்கு இந்தியப் புலனாய்வுத்துறையும் பின்னணியில் உள்ளது.

பம்பாயில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கு சுப்பிரமணியம் சுவாமி போன்ற அரசியல்வாதிகள் புலிகளைக் குற்றம்சாட்டினார்கள் என்றால், 'இந்தியா ருடே' போன்ற பத்திரிகைகள் புலிகள் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் எந்தளவு என ஆராய்ந்தன. இதேபோன்று தமது தவறான அணுகுமுறையால் ஆட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடிக்கு கருணாநிதி போன்றவர்கள் விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டினார்கள் என்றால், தமிழக முதலமைச்சருக்கும் - ஆளுநருக்கும் இடையில் எழுந்த முரண்பாடு மோதல் என்பவற்றிலும் புலிகளின் பெயர் அடிபடாமலும் இல்லை.

ஆனால், இந்தியாவில் பிரச்சினைகள் உருவாவதற்கு வெளிநாட்டு சக்திகள் எவையுமே பங்களிப்பு எதையும் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில், இந்தியாவில் இன, மொழி, மத பிரச்சினைகளில் இருந்து அரசியல் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் என்பன நிறையவே உள்ளன. அதாவது தேசிய இனங்களின் பிரச்சினையில் இருந்து சாதிப் பிரச்சினை, சீதனப்பிரச்சினைவரை அவைபரவிக் காணப்படுகின்றன. இந்நிலையில், அந்நியர் தலையீடே இந்தியாவின் பிரச்சினைகளுக்குக் காரணம் எனக் கூறுவது பிரச்சினைகளைத் திசைமாற்றி விடுவதற்கான முயற்சியைத்தவிர வேறில்லை.

இந்த வகையிலேயே பத்திரிகையாளரான இந்திராணி பெனார்ஜி, பூநகரி இராணுவ முகாமைத் தாக்க விடுதலைப் புலிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் பாகிஸ்தானில் இருந்து பெறப்பட்டவை என்பதும், விடுதலைப் புலிகளின் உறுப்பினர் சிலர் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் காஷ்மீர் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி வழங்குவதாகத்

# மகப்பேற்றிற்கென தனிப்பிரிவின்றி புதுக்குடியிருப்பு வைத்தியசாலை

மாதாந்தம் சராசரியாக அறுபது குழந்தைகள் இங்கு பிரசவிக்கப்படுகின்றபோதும் கூட புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் பிரசவப் பகுதிக்கெனதனியான சிகிச்சைக் களம் எதுவுமில்லை. மகப்பேற்றிற்கென தனியான சிகிச்சைகளம் இல்லாதவைத்தியசாலையாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையேஇருப்பதாகக் கூறப்படுகின்றது.

மேலும் நாளாந்தம் சராசரியாக 275 பேர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் இந்த வைத்திய சாலையில் படுக்கை வசதிகளுடன் கூடிய கட்டில்கள் நாற்பது மட்டுமே இருக்கின்றன. ஆனால் கடந்த அக்டோபர் மாதத்தில் மட்டும் கடும் நோயுற்ற 608பேர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மேலதிக சிகிச்சைவசதி கிடைக்காமையால் கடந்த ஆண்டில் மட்டும் 84 பேர் மரணத்தைத்தழுவியுள்ளனர். அம்புலன்ஸ் வண்டியோ, மின்பிறப்பாக்கியோ அல்லது குறைந்த பட்சம் பெற்றோமக்ஸ் வெளிச்ச வசதியோ இந்தவைத்தியசாலைக்கென இல்லாமையால் விளக்கு வெளிச்சத்திலேயே சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

அத்துடன் மலசல கூட வசதியின்மை, கிணற்றில் இருந்து நீர் பெறும் வசதியின்மை, எழுது வினைஞர்கள் இன்மை எனப் பலவேறு இல்லாமைகளோடும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை இயங்கி வருகின்றது.

## இலவச சீருடை

இடம்பெயர்ந்த குரும்பசிட்டி மாணவர்களுக்கு இலவச சீருடை விநியோகிக்கும் வைபவம் இன்று காலை மூன்று மணியளவில் மருதனார்மடத்தில் இருக்கும் யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனத்தில் இடம் பெறவுள்ளது.

கனடாவிலுள்ளகுரும்பசிட்டி நலன்புரிச்சபை மற்றும் சுவிசில் இருக்கும் குரும்பசிட்டி இளைஞர்களின் அனுசரணையுடன் குரும்பசிட்டி சன்மார்க்க சபை வழங்கும் இவ் இலவச சீருடைகளை ஐந்நூறு மாணவர்கள் பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ராணுவச் சீருடை போன்று உடை தயாரிப்பது குற்றம்

### சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

இராணுவச் சீருடைபோன்று உடை தயாரிப்பவர்கள், அதை வைத்திருப்பவர்கள் குற்றம் புரிந்தவராக கருதப்பட்டு தண்டிக்கப்படுவர் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இராணுவ உடையில் குற்றச் செயலில் சிலர் ஈடுபடுவதான செய்தி குறித்து கவனம் செலுத்தியுள்ளதாகவும் இராணுவ உடைபோன்ற சீருடை அணிந்து சில ஆயுதக்குழுக்கள் குற்றச் செயலில் ஈடுபடுவதாகவும் பாதுகாப்புஅமைச்சு தெரிவித்துள்ளது.

சில தனியார் கம்பனிகள் இராணுவ சீருடைபோன்ற ஆடைகளை தயாரிக்கின்றன. இவை பகிரங்க சந்தையில் விற்கப்படுகிறது. இது குற்றச் செயலில் ஈடுபடுவோருக்கு பெரும் உதவியாக உள்ளது எனவும் பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற உறுப்பினருக்கு விசேட கடவுச்சீட்டு

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலருக்கும் விசேட கடவுச் சீட்டுகள் வழங்குவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை அவர் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான விசேட கடவுச் சீட்டுகள் இப்பொழுது அமைச்சர்களுக்கும், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் வழங்கப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எயார் லங்கா டயறியில் யாழ்ப்பாணம் முதலிடம்?

### தினேஷ் குணவர்த்தனா குற்றச்சாட்டு

(கொழும்பு)

எயார் லங்கா நிறுவனம் வெளியிட்டுள்ள புத்தாண்டு டயறியில் இடம்பெற்றுள்ள இலங்கைப்படத்தில் முதலாம் இலக்கம் கொழும்பு பகுதியில் இருக்க இலக்க விளக்கத்தில் முதலாம் இலக்கம் யாழ்ப்பாணம் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது மாபெரும் தவறு. இந்த டயறி உலகம் முழுவதும் விநியோகமாகியுள்ளது. இந்நிலையில் இலங்கையின் தலைநகரம் யாழ்ப்பாணம் என சுற்றுலாப்பயணிகள் நினைக்க முடியும்; இது எயார் லங்கா நிறுவனத்தினுள் புலிகள் ஊடுருவியுள்ளனர் என்பதற்கு நல்ல உதாரணமாகும் இவ்வாறு அண்மையில் நாடாளுமன்றில் பேசிய தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

அவசர கால சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டைப் பாதுகாக்கவோ, மக்களைப் பாதுகாக்கவோ, வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுக்கவோ அரசினால் முடியவில்லை. புதுவருடத்திலும் அவசர கால சட்டத்தை நீடிக்கும் அவசியம் அரசுக்கு ஏற்பட்டு உள்ளது.

புலிகள் நாணய நோட்டுக்களை அச்சிட்டு வங்கிகளை அமைக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இது மிகப் பாரதூரமானதொரு விடயம் ஆகும். அரசு இந்த விடயத்தில் மௌனம் சாதிக்க முடியாது. உலகின் ஏனைய வங்கிகளுக்கு இதுபற்றி மத்திய வங்கி ஆளுநர் அறிவித்துள்ளாரா? நிதியமைச்சரான ஜனாதிபதி என்ன செய்யப் போகிறார்?

ஜனாதிபதி நாட்டில் இனப்பிரச்சினை இல்லை என்கிறார். பிரதமரோ பயங்கரவாதிகளை பேச்சுக்கு அழைக்கிறார். அரசுக்கு உறுதியான நிலைப்பாடு இல்லை என்பதையே இது காட்டுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

# அரசியல் தீர்வுதான் தேவை அமைச்சர் தேவராஜ்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு எதுவும் மேற்கொள்ளப்படாவிட்டால் அவசர கால நிலைமையின் கீழேயே நாம் எப்போதும் வாழ வேண்டிய நிலை தொடரும் என்று இந்து கலாசார அமைச்சர் பி. பி. தேவராஜ் நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவசர கால சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், அரசியல் தீர்வு தேவை என வெளியில் கூறிவரும் எதிரணியினர் இங்கு இனவாத ரீதியிலேயே பேசுகின்றனர். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே அவசியம். அதற்கு நாம் தயாராக இல்லாத நிலையில் கட்டுக்கடங்காத இராணுவ செலவையும், இதர சுமைகளையும் எதிர்கொள்ள வேண்டியே இருக்கும் என்றும் தெரிவித்தார்.

## 'முடிவில்ஓர் ஆரம்பம்' நாடகம் அரங்கேற்றம்

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் நடாத்தும் முடிவில் ஓர் ஆரம்பம்என்னும் நாடகம் நாளை வெள்ளிக் கிழமையும், நாளை மறுதினம் சனிக்கிழமையும் பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# எதிர்காலத்தை மக்களே தீர்மானிக்க வேண்டும்

### ஆப்கான் அதிபர் ரபானி

(காபூல்)

மக்கள் தான் தமது எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு உரிமை உடையவர்கள் ஆவர் என்று ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ரபானி கூறியுள்ளார். மூன்று வார யுத்தத்தின் பின்னர் காபூல் வானொலி மூலம் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், மூத்தோர்களைக் கொண்ட ஆலோசனைச் சபையொன்றை நிறுவி அதன் மேற்பார்வையின் கீழ் நடத்தப்படும் தேர்தலின் பின்னர் தான் ஆப்கானிஸ்தானின் எதிர்கால தலைமை தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும், இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு மற்றும் ஐ நா. போன்றவை இத் தேர்தலுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## 2600 ஆண்டுகளாக

## அமெரிக்க அரசு அறிவிப்பு

(வாசிங்டன்)

பஞ்சாப் பிரச்சினை தொடர்பான அதிபர் பில் கிளிண்டனின் கடிதத்தில் இந்தியாவுக்கு எதிராக எதுவும் கூறப்படவில்லை என்று வாசிங்டனில் அமெரிக்க அரசு வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

## தமிழக மீனவருக்கு அறிவுறுத்தல்

(சென்னை)

இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது இந்

# தமிழ்வாக்காளரைகுறைக்க அதிகாரிகள் திட்டமிட்டு சதி

### முத்து சிவலிங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மலையகத்தில்வாக்காளராகப் பதிவு செய்யப்படுவதிலிருந்து மலையக மக்களை அப்புறப்படுத்தும் முயற்சிகள் நடைபெறுவதாக, நுவரெலி

கம் செய்கின்றனர். வாக்காளர் பதிவுக்காக மலையகத்தவரிடமும் அடையாள அட்டை கேட்கப்படுகிறது. எனினும் கடந்த காலத்தில் பலரது அடையாள அட்டைகள் பறித்துச் செல்லப்பட்டுள்ளன.

புலிகளின் உறுப்பினர் சிலர் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் காஷ்மீர் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி வழங்குவதாகத் தெரிவித்துள்ளமையும் ஆகும்;

இதுபோன்ற, குறிப்பாக பாகிஸ்தானிடம் விடுதலைப் புலிகள் ஆயுதம் பெற்றுக் கொள்வதான குற்றச்சாட்டை முதலாவது முன்வைக்கும் இந்தியப் பத்திரிகையாளர் இந்திராணி பெனார்ஜியாக இல்லாது விடினும், இக்குற்றச்சாட்டானது, இப்பத்திரிகையாளரினதும், இந்தியப் புலனாய்வுத்துறையினதும் திட்டமிட்ட சதிநடவடிக்கை என்று துணிந்து கூறமுடியும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிராக சர்வதேச அளவில் மாசு கற்பிக்க முற்பட்டுள்ள இந்தியப் புலனாய்வுப் பிரிவினரின் சதி நடவடிக்கையாகும்.

இந்திய அரசு மூன்று தடவை பாகிஸ்தானுடன் யுத்தம் புரிந்துள்ளது. தனக்குச் சொந்தமான காஷ்மீரின் ஒரு பகுதியை - ஆஸாத் காஷ்மீர் - பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ளதாகக் குற்றம் சாட்டுகின்றது. அத்தோடு, இந்தியா - பாகிஸ்தான் எல்லை பதற்றம் நிறைந்ததாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றது, இப்பதற்றம் அணு ஆயுத யுத்தம் ஒன்றுக்கு வழிவகுக்கக் கூடும் எனவும் எச்சரிக்கப்படுவதும் உண்டு. இந்நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் பாகிஸ்தானுக்கும் தொடர்பு உண்டு எனக் குற்றம் சாட்டுவது இலங்கைத் தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிராக இந்திய மக்களைத் திட்டமிட்டு திருப்பிவிடும் செயலாகும்.

ஆனால், இக்குற்றச்சாட்டு ஆதாரமெதுவும் அற்றது. பூநகரி படைத்தளத்தின் வீழ்ச்சி குறித்து ஆராய்ந்த இராணுவ விசாரணைக்குழு கூட இவ்வாறான சந்தேகம் எதையும் வெளியிடவில்லை. அதாவது பூநகரிப் படைத்தளத்தைத் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் புதியரக ஆயுதங்களையோ, கனரக ஆயுதங்களையோ பயன்படுத்தியதாக எதிலும் கூறவில்லை. இதே வேளை வெளிநாட்டுத் தொடர்புகள் இருந்ததாக முதலில் சில சிங்களப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியைக் கூட அரசு மறுத்திருந்தது என்பதே உண்மை.

இந்நிலையில் இந்திராணி பெனார்ஜியின் குற்றச்சாட்டானது இந்திய மக்கள் மனத்தில் இலங்கைத் தமிழருக்கு எதிராக உணர்வை உருவாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட நீண்டகால நடவடிக்கையின் ஓர் அம்சமாகும். ஆனால், இதன் மூலம் இந்திய அரசு நன்மை அடையப்போவதில்லை. இலங்கைத் தமிழருக்கு எதிரான இந்நடவடிக்கையில் தற்பொழுது இந்திய புலனாய்வுத்துறை திருப்திப்பட்டுக் கொண்டாலும் இதன் உண்மைகள் வெளியாகும் போது அதன் எதிரொலி, இலங்கையில் கேட்பதைவிட இந்தியாவிலேயே பலமாகக் கேட்கும்.

# 2600 ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்ட உடல்

(நிக்கோஸியா)

2600 ஆண்டுகளாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த ஒரு மனிதனின் பிரேதத்தை புதை பொருளியலாளர்கள் கண்டுபிடித்திருப்பதாக ஈரானிய செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

செஹராபாத் என்ற கிராமத்துக்கருகில் இடதுகாதில் தங்கக்கடுக்கன் அணிந்திருந்த நிலையில் இப்பிரேதம் கண்டு பிடிக்கப்பட்டதாம்.

உப்புக்குதம் ஒன்றில் புதையுண்டிருந்த இம்மனிதனின் புருவம், மீசை, தாடி ஆகியவை நல்ல நிலையில் இருந்ததாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொஸ்னியாவில் அமைதிப்பணி முட்டுக்கட்டை நிலையில்

## அமைதிப்படைத் தளபதி தெரிவிப்பு

(சரயேபோவா)

ஐ. நா. தீர்மானங்களை அமுல்படுத்த தவறியுள்ளமையால் பொஸ்னியாவில் அமைதி காக்கும் நடவடிக்கையில் பாரிய முட்டுக்கட்டை நிலை தோன்றியிருப்பதாக பொஸ்னியாவிலுள்ள ஐ நா அமைதிப் படைத்தளபதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் அமைதிப் படையின் நடவடிக்கைகள் பற்றிய தமது முன்னைய விமர்சனங்களையும் சுட்டிக் காட்டினார்.

பொஸ்னியாப் போரில் ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுதங்கள் களையப்பட்டு நிராயுதபாணிகளாக்கப்படவேண்டும் என்று பாப்பரசர் ஜோன் போல் கோரிக்கை விடுத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் பொஸ்னியாவிலுள்ள பி.பி.சி. முகவர் குறிப்பிடுகையில் சர்வதேச சமூகத்தையும் சேர்ந்த அரசியல்வாதிகள் குறிப்பிடும் தீர்மானங்களை செயற்படுத்தும் நிலைமையில் பொஸ்னியாவிலுள்ள ஐ நா. அமைதிப் படையினர் இல்லை என்று தெரிவித்தார்.

# காஷ்மீரில் இரும்புத்திரை பாக். பிரதமர் வர்ணிப்பு

(இஸ்லாமாபாத்)

காஷ்மீரில் இரும்புத் திரையொன்றை இந்தியா நிறுவி இருக்கிறது என்று பாகிஸ்தான்பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோ கூறியுள்ளார். அண்மையில் பாகிஸ்தான் தொலைக்காட்சியில் உரை நிகழ்த்திய அவர் மேலும் குறிப்பிடுகையில், சுதந்திரம் பெற அல்லது பாகிஸ்தானுடன் இணைய விரும்பும் காஷ்மீர் மக்களை இந்தியா அடக்குகின்றது இந்தியா காஷ்மீரில்புரியும்மனிதஉரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு முன்பாக எடுத்துரைக்கவுள்ளதாகவும் காஷ்மீரின் அரசியல் கைதிகளை விடுவித்து, துருப்புக்களின் எண்ணிக்கையைக் குறைத்து சர்வதேச மனித உரிமைக் குழுக்களின் பிரதிநிதிகள் காஷ் மீருக்கு விஜயம் செய்ய அனுமதிக்காத வரை இந்திய அரசுடன் காஷ்மீர் பிரச்சினைபற்றி பேச்சு நடத்துவதில் அர்த்தமில்லை எனவும் தெரிவித்தார்.

(சென்னை)

இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது இந்தியக் கடல் எல்லையை கடந்து செல்ல வேண்டாம் என்றும், மீன் பிடிக்கப் போகும் போது உரிய அடையாள அட்டைகளையும் சம்பந்தப்பட்ட பத்திரங்களையும் உடன்எடுத்து செல்ல வேண்டுமெனவும் தமிழக அரசின் மீன் வளத் துறையினர் அறிவித்து இருக்கின்றனர்.

# கல்கட்டிற்கு விருது

இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட முப்படைகளையும் சேர்ந்த பத்தொன்பது அதிகாரிகளில் இலங்கையில் இந்திய இராணுவத்தின் தளபதியாக இருந்த லெப். ஜெனரல் ஏ. எஸ். கல்கட்டும் இடம்பெற்றுள்ளார். பரம் விசிஷ்ட் சேவா விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

# தென் கொரியாவுக்கு பற்றியாட் ஏவுகணை?

(வாஷிங்டன்)

தென் கொரியாவுக்கு பற்றியாட் வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. வட கொரியா ஏவுகணைத் தாக்குதல் நடத்தலாம்என்று எதிர்பார்க்கப்படுவதால் அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனமான சி. ஐ ஏ இதற்கு ஆதரவாக இருப்பதாகவும் இதனால் கிளின்டன் நிர்வாகம் பற்றியாட் ஏவுகணைகளை தென் கொரியாவுக்கு வழங்கலாம் எனவும் கூறப்படுகிறது. மத்தியகிழக்கு யுத்தத்தின் போது ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைத்தாக்குதலுக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்கா இஸ்ரேலுக்கும் மற்றும் சில அரபு நாடுகளுக்கும் இந்த ரக ஏவுகணைகளை வழங்கியது தெரிந்ததே.

ருந்து மலையக மக்களை அப்புறப்படுத்தும் முயற்சிகள் நடைபெறுவதாக, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் மலையகத்தில் ஐம்பது சதவீதமான வாக்குகளைக் குறைப்பதற்கான திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை துஷ்பிரயோ கடந்த காலத்தில் பலரது அடையாள அட்டைகள் பறித்துச் செல்லப்பட்டுள்ளன.

மலையகத்தில் கைதான அப்பாவிகள் குறித்து நாம் பல தடவைகளில் எடுத்துக் கூறியும் எவரும் விடுவிக்கப்படவில்லை, இவ்வாறான காரியங்களால்தான் எம்மிடையே பிளவுகளும் மனக்கசப்புகளும் ஏற்படுகின்றன; எனவும் தெரிவித்தார்.

# திருடப்பட்ட 25 சைக்கிள்கள் காவல்துறையினரால் மீட்பு

(நமது நிருபர்)

1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலும் துவிச்சக்கரவண்டிகளைகளவு செய்வோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணையின்போது தமிழீழக் காவல்துறையின் யாழ் காவல்பணிமனையினர் சந்தேகத்தின் பெயரில் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர் இவர் முத்திரைச்சந்தை நல்லூர்ப்பகுதியில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது விசாரணையை மேற்கொண்ட யாழ் காவல் பணிமனையினர் சுமார் 25 துவிச்சக்கரவண்டிகளை மீட்டுள்ளனர்.

இதைவிட இக்காலப்பகுதியில் மேற்படி கைதுசெய்யப்பட்ட நபர் நல்லூர் பிரதேசத்தில் பெருமளவு களவுகளில் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது மேலும் மீட்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். காவல்பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

(பா)

# மதுவரி பாதுகாவலர் நேர்முகப் பரீட்சை

(கொழும்புத்துறை)

கொழும்பு மதுவரித் திணைக்கள ஆணையாளரினால் கோரப்பட்ட மதுவரிப் பாதுகாவலர் பதவிக்குரிய ஆரம்ப நேர்முகப் பரீட்சை ஜனவரி மாதம் 31-ம் திகதி திங்கட்கிழமையும், பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், 2ஆம் திகதி புதன் கிழமையும் வடமாகாண மதுவரி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

அதற்குரிய கடிதங்கள் யாவும் விண்ணப்பக்காரர்களுக்கு 24ஆம் திகதி திங்கட்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனவே நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்களை தங்கள் தங்கள் பகுதி அஞ்சல் அலுவலகங்களில் தாமதியாது நேரில் சென்று பெற்றுக் கொள்ளுமாறும், நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது தவறாது தத்தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருமாறும் வடமாகாண மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(24)

எமது
புதிய வெளியீடுகள்
❋ சத்யராஜ் ❋ சுஜாதா ❋ கஸ்தூரி
● அமைதிப்படை
❋ விஜயகாந்த் ❋ மீனா ❋ கவுண்டமணி
● சேதுபதி I. P. S.

இந்த இரண்டு படங்களை நல்ல பிரதிகளில் பதிவு செய்து கொள்ள எங்களிடம் தொடர்பு கொள்ளவும், அத்துடன் புதிய படங்கள் யாவும் புத்தம் புதிய கசெட்டில் பதிவு செய்து வாடகைக்கு கொடுக்கின்றோம் என்பதை நினைவில் வைத்திருக்கவும்,

புதிய படங்களை நல்ல பிரதிகளில் பெற்றுக்கொள்ள

நாடுங்கள் எம்மிடம்

குணா வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-8464)

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 21-01-94 வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெற்ற பொழுது பின்வரும் கௌரவ உத்தியோகத்தர்களும், 16 நிர்வாக சபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

1. தலைவர்: வே. சிற்சபேசன்
2. செயலாளர்: நா. த. அன்னலிங்கம்
3. பொருளாளர்: பொ. சந்திரலிங்கம்
4. உபதலைவர்: க. வி குலரெத்தினம்
5. உபசெயலாளர்; கே. கே. இராசரெட்ணம்

(சி-8460)

யாழ். வர்த்தகர் சங்கம்

எமது புதிய வெளியீடுகள்
பிரபுவின் 100வது படம்
பிரபு, நதியா நடித்த
ராஜகுமாரன்
சத்தியராஜ் (இரு வேடம்) ரஞ்சிதா நடித்த
அமைதிப்படை
என்றும் தரமான பிரதிகளின் முன்னோடிகள்
சுப்பர்ஸோ
வீடியோ, ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி - யாழ்ப்பாணம்

# யாழ். மீது குண்டு வீசுவதை அரசு உடன் கைவிட வேண்டும்

## யாழ். அரச அதிபர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா விமானப்படை குண்டு வீசுவதை உடனடியாக கைவிட வேண்டும் என யாழ். அரசஅதிபர் கா. மாணிக்கவாசகர் அரசை கோரியுள்ளதாக கொழும்பு தினசரியை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது

கடந்த மாதம் இராணுவம் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலில் 41பேர் பலியாகினர் எனவும் தொடர்ந்து மக்கள் மீது படைகள் தாக்குதல் நடத்துவதோ மருந்து, உணவுத் தட்டுப்பாட்டை அரசு ஏற்படுத்துவதோ அரசு மீதான நம்பிக்கையை குலைத்துவிடும் எனவும் அரச அதிபர் குறிப்பிட்டதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஐ. தே. கவில்

துள்ளதாகக் கூறியது பிழையானதாகும்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தொடர்ந்தும் நல்லமுறையில் செயல்படும். கட்சிப் பொதுச் சபையின் பெரும்பாலானவர்களும் மாகாண சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்களும் கட்சியின் செயல்திட்டங்களை செயல்படுத்துமாறு என்னிடம் தனிப்பட்ட முறையில் கூறியுள்ளதுடன் அதற்குத் தாம் ஆதரவு அளிப்பதாகவும் கூறியுள்ளனர்.

இவ்வேலைத் திட்டங்கள் தொடர்ந்து செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வெளியூர்

லக வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இதுவரை காலமும் வெளியூர் தபால்கள் வந்ததும் முப்பது ஊழியர்கள் வரை கடமையில் ஈடுபடுத்தப்பட்டு தபால்கள் தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வந்தன. ஆனால் இம்முறை இத்தபால்கள் பத்து ஊழியர்களால் காலை 8மணிமுதல் நண்பகல் 12 மணிவரை மட்டும் தரம்பிரிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

முதலில் வெளிநாட்டு தபால்களே தரம்பிரிக்கப்படவுள்ளதாகவும் இன்று இத்தரம்பிரிப்பு வேலை மட்டுமே நடைபெறும் எனவும் நாளை முதல் விநியோகம் ஆரம்பமாகும்எனவும் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

காமினி

மேலும் ஜனநாயக ஐக்

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதும்.

பிரச்சினைக்கு

மாதகல் பகுதிகளுக்கும் சென்றேன் அங்கு இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களையும் முதியவர்களையும் சந்தித்தேன். அவர்களும் தங்கள் தங்கள் நிலைமைகள் பற்றி எமக்கு தெரிவித்தார்கள் என்றார் அதிமேற்றிராணியார்.

இதேவேளை புனிதயாகப்பர்ஆலயபுனருத்தாரனஉறுப்பினர் சந்திப்பின் போது பேசியஅதிமேற்றிராணியார், வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் தனக்கு மிகுந்த கவலை அளிப்பதாகத் தெரிவித்தார்.

அங்குஅவர் மேலும் உரையாற்றியபோது, "தமிழ்மக்களின் துயரங்களை நாம் நேரில் சென்று பார்த்து வருவதால் நன்கு உணர்கின்றோம். நாம் திருச்சபையாகவடகிழக்குமக்களின் துன்பங்களை அறிந்து அதற்கு பரிகாரம் தேடக் கூடியவழிமுறைகளை ஆராய வேண்டும். குறிப்பாக யாகப்பர் ஆலயம் தகர்க்கப்பட்டது தொடர்பாக சிறிலங்கா கத்தோலிக்கஅமைச்சர்களூடாக இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அரசுக்கும் பாப்பாண்டவர் பிரதிநிதிகளுக்கும் இது குறித்து அறிவிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் மட்டுமல்ல சிறிலங்காவிலுள்ள பெரும்பாலான மக்களும் சமாதானத்தையே விரும்புகின்றனர்.

## ஒரு பகுதி தபால் இறக்கம்

(யாழ்ப்பாணம்)

''வாதுவ'' என்ற கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட தபால் பொதிகளில் ஒரு பகுதி நேற்று இறக்கப்பட்டு யாழ். தபால் அலுவலகத்துக்கு எடுத்துவரப்பட்டது.

## இன்று தைப்பூசம்

(கொழும்புத்துறை)

இன்று தைப்பூச தினம் யாழ். குடாநாட்டிலுள்ள முருகன் ஆலயங்களில் விசேட அபிசேகம், பூசை ஆராதனை என்பன இடம்பெறவுள்ளன. (24)

## வெடி விபத்தில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுத்துவக்கிற்கு மருந்து அடைந்தபோது அது வெடித்ததில் கெற்பெலியைச்சேர்ந்த ஐயாத்துரை குணரட்ணம் (வயது 24) என்பவர் காயமடைந்தார்.

பன்றி, முயல் போன்றவற்றை வேட்டையாடுவதற்காக கட்டுத்துவக்கிற்கு தான் மருந்தடைந்ததாகவும் அது தவறுதலாக வெடித்தது எனவும் காயமடைந்தவர் தெரிவித்தார். (சி)

நியமிக்கப்

இணைந்து பணியாற்றுவது என்பது இயலாத ஒருகாரியம் என பாஸ்கரலிங்கம் தெரிவித்ததாக 'ராவய' செய்தி வெளியிட்டுள்ளது.

இரேக்க கப்பலில்

செய்யப்பட்டுள்ளனர்.

பொருள்களை இறக்குவதற்காக கொழும்பு துறைமுகத்திற்கு வந்த 'ஜில்லா' என்ற கப்பலில் இருந்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் சிலர் வடக்கு கிழக்கை சேர்ந்தவர்கள். ஏனையோர் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என

## சுதந்திரப் பறவைகள் தை இதழ் வெளியாகிறது

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான 'சுதந்திரப் பறவைகள்' தைமாத இதழ் இன்று வெளிவருகிறது.

இதில் ''தமிழீழ காவல் துறை நிர்வாகத்தில் பெண்கள் வகிக்கும் பங்கு' எனும் தலைப்புச் செய்தியுடன் 'ஆனை கட்டிய அரியாத்தை'', ''நான்காம் ஆண்டு நினைவில் மேஜர் சோதியா'' ''சுதந்திரத்தைத் தேடி'' ''தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர்படையணி'' ''தெளிவு'' சிறுகதை ''கேணல் கிட்டு நினைவு..'' ''நோபல் பரிசுபெற்ற பெண்கள்'' ஆகிய அம்சங்கள் பிரசுரமாகியுள்ளன.

## வாகன விபத்தில் எட்டுப் பேர்காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பளை நோக்கி சென்றுகொண்டிருந்த தட்டி வான் ஒன்று கொடிகாமம் சந்திக் கண்மையில் விபத்துக்குள்ளானதில் இதில் பயணம் செய்த எட்டுப்பேர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை யாழ். நகரில் இருந்து பளையை நோக்கி பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த மேற்படி வான் கொடிகாமம் சந்திக் கண்மையில் உள்ள மகாவித்தியாலயத்திற்கு அருகில் ''ஸ்ரேறிங் றொட்'' உடைந்ததால் ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் அருகில் உள்ள பனை மரத்துடன் மோதியது.

மேற்படி விபத்தில் காயமடைந்தவர்களை சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து சாந்தநாயகி செல்லத்துரை, ந. ராசமணி (வயது 50) ஆகிய இருவர், யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர். (சி) (86)

குத்திப்

ளது இவர் யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (சி)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 26-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 426

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-8600, 27-9327, 25-5145, 24-1040, 28-9261
26-4550, 41-9211, 28-4023, 28-7978, 26-6392
26-0507, 22-7566, 41-9759, 42-1494, 26-1019
28-1928, 26-3605, 24-9609, 24-4560, 41-9995
28-8444, 24-0521, 41-5979.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-1583, 28-3429, 24-5877, 26-7286, 24-6431
26-7252, 26-4726, 27-6024, 28-2979, 42-1722
27-2016, 26-8917, 24-2024, 28-0732, 41-8657
26-4648, 24-6448, 41-2509, 28-1106, 43-3854
28-1110, 26-3390.

## மரண அறிவித்தல்

சின்னத்துரை பாலசரஸ்வதி (பாலா)

198/5, நாவலர் வீதி - யாழ்ப்பாணம்
(7346)


# VACANCY

## PROJECT OFFICER
### Mannar Main Land (Madhu)

The post holder will be responsible for the day to day Implementation of SCF activities and monitoring of SCF funded projects.

**Main Requirements:** Proven experience in Relief & Rehabilitation work in Food security, Income generating activities, Community health, women and children affected by the conflict. Also experi-ence in project management Is required.

Starting salary Rs 4,673/- plus medical benefits.

The application should be sent to the following address:

**Save the Children Fund (U. K),**
"Karuvemban Valavu",
Rajaveethy,
Thirunelvely.

Closing date: 11th Feb 94 (சி-8465)



# வினா விடை வகுப்பு நடைபெறமாட்டாது

03-01-94 ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்தில் குறிப்பிட்டதைப்போன்று 'மீட்டல் வினா விடை வகுப்பு' எமது நிறுவனத்தில் நடைபெறாது என அறியத்தருகின்றோம்.

யூனிவேர்சல்,
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
(சி-8469)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்...


காமினி

மேலும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஜீ.எம். பிரேமச்சந்திராவும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.எம். முத்து பண்டாரவும் இவ் வைபவத்தில் கலந்துகொள்ள வில்லை என தெரிவிக்கப்படுகிறது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை விஞ்ஞானபீடம்

1992/93-ம் ஆண்டிற்கு விஞ்ஞான பீடத்தில் பதிவு செய்து கொண்ட எல்லா மாணவர்களுக்கும் 31-01-1994 திங்கட்கிழமை தொடக்கம் முதலாம் வருடவிரிவுரைகள் ஆரம்பமாக உள்ளன. எனவே மேற்படி மாணவர்கள் சகலரும் 31-01-1994 தொடக்கம் வகுப்புகளிற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

முதலாம் வருடத்தில் கணணி விஞ்ஞானத்தை ஒருபாடமாக கற்க விரும்பும் மாணவர்களுக்கான தெரிவுப் பரீட்சை 28-01-1994 வெள்ளிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு நடைபெறும்.

(சி-8467) பதிவாளர்


சிறிலங்காவிலுள்ள பெரும்பாலான மக்களும் சமாதானத்தையே விரும்புகின்றனர். நான் யாழ்ப்பாணம் வருவதையறிந்த தென்னிலங்கையில் பலரும் அரசியல்வாதிகள் சிலரும் சமாதான முயற்சியை மேற்கொள்ள முடிந்தளவு முயற்சிக்குமாறு என்னைக்கேட்டுக்கொண்டனர்'' எனவும் அதி வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ குறிப்பிட்டார். (யோ)

## புனிதயாகப்பர்

மடைந்தமை குறித்து இப்பகுதி மக்களின் உணர்வலைகளை அறிந்து கொள்வதற்காக மக்கள் பலரையும் சந்தித்து ஆயர் குழுவினர் உரையாடினர்.

அத்துடன் மேற்படி ஆலயம் மீதான தாக்குதலில் உயிர்தப்பிய சிறு குழந்தை ஒன்றையும் பார்வையிட்டனர்.

அதேவேளை தாக்குதலுக்குள்ளான மேற்படி தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தேவையான சகல ஏற்பாடுகளையும்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக கொழும்பு அதிமேற்றிராணியார் உறுதிவழங்கினார்.

வடக்கு கிழக்கை சேர்ந்தவர்கள். ஏனையோர் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என பொலிசார் தெரிவித்தனர். இவர்களில் ஐவரிடம் போலி ஆவணங்கள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இவர்கள் மீதான விசாரணை தொடர்வதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## புலிகளுடனான

மான விடயங்கள் குறித்தும் அது சம்பந்தமான நடைமுறைகள் பற்றியும் இலங்கையில் செஞ்சிலுவை பணியில் ஏற்படும் இடர்கள் குறித்தும் சிறிலங்கா இராணுவ அரசியல் மட்டங்களுடன் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா, பூட்டான், நேபாளம்,ஆப்கானிஸ்தான், சிறிலங்கா போன்ற நாடுகளில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தால் பராமரிக்கப்படும் விடயங்கள் அடங்கிய ஆவணங்களை பரிசீலித்து வதிவிடப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிப்பதே இவ் விஜயத்தின் பிரதான பணி என தெரியவருகிறது.

செஞ்சிலுவை பிரதிநிதிகள் இன்று காலை கொழும்பு திரும்புவர்.


## முக்கிய அறிவித்தல்
### இறைச்சிக்கடை

இறைச்சிப் பாவனையாளருக்கு (சின்னக்கடை) குருநகர் சந்தையில் மாநகரசபையின் சுகாதாரவைத்திய உணவுப் பரிசோதகரினால் பரிசோதித்துமுத்திரையிட்ட மாட்டிறைச்சி 1 கிலோ 60/- ரூபாய்க்கு தற்காலிகமாக 29-01-94 சனிக்கிழமைதொடக்கம் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும் என்பதை பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நன்றி

மாட்டிறைச்சிக்கடை
உரிமையாளர்
(சின்னக்கடை)
குருநகர் சந்தை,
யாழ்ப்பாணம்.
26-01-94

வை. சருணாகரன்
ஆ. மகாலிங்கம்

(7345)


## சின்னத்துரை பாலசரஸ்வதி (பாலா)

சின்னத்துரை பாலசரஸ்வதி (பாலா)(25-01-94) அன்று அகாலமரணமானார். அன்னார் சின்னத்துரை புவனேஸ்வரியின் அன்புமகளும், புவேந்திரன் (இந்திரன்), கஜேந்திரன் (ரவி-போராளி), கௌதமன் (தெய்வம்), கஜமுகன் (கண்ணன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமச் சடங்குகள் (26-01-94) நேற்று நடைபெற்றது என்பதைஉற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.


தகவல்:
(கௌதமன் சுவீனா)

27, புத்துவெட்டுவான்,
கிளிநொச்சி. (7341)

## ஓராண்டு நினைவலைகள்

பிறப்பு:
24-08-1921

இறப்பு:
06-02-1993



அமரர்
### கந்தையா கிருஷ்ணபிள்ளை
திதி 27-01-1994

பன்னிரு மாதங்கள் சென்றாலும் உங்கள்
நினைவு எங்கள் உள்ளங்களிலிருந்து
அகலவில்லையே...

3513 கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

குடும்பத்தினர்
((சி-8466)